**மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்**
**2013 மார்ச் மாதம் 19 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

**நிகழ்ச்சி நிரல்**

I. **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

II. **அறிக்கைகளையும், ஆவணங்களையும் சமர்ப்பித்தல்**

III. **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

IV. **மனுக்கள்**

V. **கேள்விகள்**

01. **கௌரவ நளிந்த ஜயதிஸ்ஸ உறுப்பினர் அவர்களினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு அமைச்சரிடம் 2013.02.19 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/V**
(01)13/03)

அ. பத்தரமுல்ல படபொத சிறீ சுதர்சன வித்தியாலயம் சிறப்பு பாடசாலைச் செயற்திட்டத்திற்கு உட்பட்டதா ?

ஆ. இதற்கிணங்க அதன் இரண்டாம் பிரிவை அகற்றுவது எவ்வருடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது ?

இ. அப்பாடசாலையை சிறப்புப் பாடசாலை செயற்திட்டத்திற்கு உள்ளடக்குவதற்காக சிறீ ஜயவர்தனபுர கல்வி வலையத்தின் மாகாண சபை உறுப்பினர்களின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா ?

ஈ. அப்பாடசாலையின் இரண்டாம் வகுப்பினை அகற்றுவதை தடுப்பதற்காக 2013.02.03 ஆந் திகதி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினால் உபகார வைபவம் ஒன்று நடத்தப்பட்டதா ?

உ. அப்பாடசாலையின் அதிபர் அதனுடன் தொடர்பு பட்டுள்ளாரா ?

ஊ. அவ் உபகாரம் கிடைக்கப்பெற்றவர்கள் யார் ?

02. **கௌரவ நளிந்த ஜயதிஸ்ஸ அவர்களினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு அமைச்சரிடம் 2013.02.19 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/V**
(01)13/04)

2005 இருந்து 2012 ஆண்டு வரை களுத்துறை கல்வி வலயத்தில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில்

அ. ஒவ்வொரு பாடத்திலும் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை

ஆ. ஒவ்வொரு பாடத்திலும் சித்தி எய்திய மாணவர்களின் எண்ணிக்கை

இ. ஒவ்வொரு பாடத்திலும் சித்தி எய்திய விகிதாசாரம் என்பவற்றை

இந்த கௌரவ சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

03. **கௌரவ மஞ்சு சிறீ அரங்கல எதிர்க்கட்சித் தலைவர் அவர்களினால் விவசாயம், கமத்தொழில் அபிவிருத்தி, சிறு நீர்ப்பாசனம், கைத்தொழில் மற்றும் சுற்றாடல் விடயப் பொறுப்பு அமைச்சரிடம் கேட்பதற்கு :** (கே/v (1)13/05)

அ. 2010 ஆம் ஆண்டுக்காக மேல் மாகாணத்தின் கைத்தொழில் திணைக்களம் நூலினைக் கொள்வனவு செய்த ஸ்தாபனங்களின் பெயர்களைக் குறிப்பிடுவீர்களா ?

ஆ. அந்த நூல்களை வர்ணம் தீட்டுதல் செய்த ஸ்தாபனங்களின் பெயர்களைக் குறிப்பிடுவீர்களா?

இ. நூலினைக் கொள்வனவு செய்த ஸ்தாபனத்திலேயே வர்ணம் தீட்டல் மேற்கொள்ளப்பட்டது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

ஈ. கொள்வனவு செய்யப்பட்ட நூலில் மஹர களஞ்சியத்திற்கு முழுப் பெறுமதியும் கிடைக்கப்பெறவில்லை என்பதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

உ. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நூல்களில் மஹர களஞ்சியத்துக்கு கிடைக்கப்பெறாத நூலின் அளவு எவ்வளவு?

ஊ. இங்கு நிகழ்ந்துள்ள பாரதூரமான மோசடி தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் விசாரனை ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

எ. அப்படியாயின் அதன் முன்னேற்றத்தினைத் தெளிவுபடுத்துவீர்களா?

ஏ. அம் முறைகேடு சம்மந்தமாகவும் உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் திணைக்கள ரீதியில் ஒழுக்காற்று விசாரனை ஒன்றினை மேற்கொள்வீர்களா?

ஐ. அப்டியாயின் ஏன்?

VI. **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

VII. **அமைச்சுக்களின் அறிவிப்புகளும் / அமைச்சர்களின் தகவல்களும்**

VIII. **தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்**

IX. **தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கை**

01. **கௌரவ நளிந்த ஜயதிஸ்ஸ உறுப்பினர்**

*கல்வி மற்றும் உயர்கல்வி துறைகளில் அண்மைக் காலமாக பல பிரச்சனைகள் தோன்றின நாட்டின் உச்ச அறிவு வளமான பல்கலைக்கழகத்தின் கலா நிதிகள், பேராசிரியர்கள் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர், கல்விக்காக போதிய அளவான ஏற்பாடு ஒதுக்காமையே இந்த பல பிரச்சனைகளுக்கு அடிப்படைக் காரணமாகும். யுனெஸ்கோ தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டு இலங்கை அரசாங்கத்தினால் இடைக்கிடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை ஒன்றான தேறிய தேசிய உற்பத்தியின் 6% அளவை கல்விக்காக ஒதுக்க வேண்டும் என இந்த மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது.*

(பி/v (01)12/16)

02. **கௌரவ சுகத் மதுகமகே உறுப்பினர்**

*“சர்வதேச பிரிவினைவாதிகளுக்கு ஏற்ற முறையில் ஒரு அணியாக செயற்பட்ட எல்.ரீ.ரீ.ஈ மிலேச்ச இனவாத ஆயுதக் குழுவினை யுத்தரீதியாக தோற்கடித்த பின்னர்*

*பல்வேறு பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரிவினைவாதிகள் தமது நிகழ்ச்சி நிரலை மீண்டும் புதுப்பித்து புதிய வழி ஒன்றின் கீழ் புதிதாக ஆரம்பித்துள்ளபடியால் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அப் புதிய ஈழத் திட்டத்தினைத் தோல்வி அடையச் செய்ய முழு இனத்தையும் வரிசைப்படுத்த வேண்டும் என மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது".* (பி/v (01)12/17)

X. **சபை ஒத்திவைப்பு பிரேரணை**

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2013.03.05 ஆந்» திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா.)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, B அலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.